அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்தித்து திட்டங்களை தீட்டி வருகிறார் முதல்வர்!

# நெய்வேலி தொகுதிக்குத் தனியாக வட்டாட்சியர் அலுவலகம் அமைத்திடுக!

## சட்டப் பேரவையில் நெய்வேலி சபா. இராஜேந்திரன் கோரிக்கை!

**நெய்வேலி, ஜூலை 1- சட்டப்பேரவையில் - இந்து மற்றும் வணிக வரித்துறை, சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கையில் நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா. இராஜேந்திரன் பேசுகையில் நெய்வேலி தொகுதிக்குத் தனியாக வட்டாட்சியர் அலுவலகம் அமைத்திடவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் நெய்வேலி கழக உறுப்பினர் சபா. இராஜேந்திரன் பேசியதாவது:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நூற்றாண்டு நிறைவு கண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

நாடும் நமதே! நாற்பதும் நமதே! என்ற முழக்கத்தை கையில் எடுத்து நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40ம் வெற்றி பெற்று, அகில இந்தியா முழுவதும் தமிழ்நாட்டிற்கு தனி மரியாதையை ஏற்படுத்தி கொடுத்த முதல்வர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தன் உழைப்பால், சூறாவளி பிரச்சாரத்தால், வியூகத்தால், எந்தத் தேர்தலாக இருந்தாலும் வெற்றிதான். இனியும் எல்லா தேர்தல்களிலும் வெற்றிதான் என்று கழகத்தை வழிநடத்தும் பாசமிகு இளம் தலைவர் அவர்களை வணங்குகின்றேன்.

அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் சி.வி. கணேசன் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா மற்றும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நெய்வேலி தொகுதி வாக்காளர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 46,163 இந்து சமய மற்றும் சமண சமய திருக்கோயில்கள் உள்ளன. திராவிட மாடல் ஆட்சியில் இதுவரை 8,848 திருக்கோயில்களுக்கு மாநில வல்லுநர் குழுவினால் திருப்பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளது. நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில்கிட்டத்தட்ட ரூபாய் ஆறாயிரம் கோடி மதிப்புள்ள கோயில் நிலங்கள் மற்றும் கட்டடங்கள் மீட்கப்பட்டுள்ளன. கிராமப்புற, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில் திருப்பணிக்காக நிதியுதவி முன்பு, ரூபாய் ஒரு இலட்சமாக இருந்ததை நமது ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு ரூபாய் 2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

மேலும், 27.2.2024 அன்று நடந்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை ஆலோசனைக் குழு கூட்டத்திற்குப் பிறகு 2,50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், 2,500 திருக்கோயில்கள் பயன்பெறும். நிதி வசதி இல்லாத திருக்கோயில்கள் திருப்பணிக்கென தனியாக நிதியம் ஏற்படுத்தி முதற்கட்டமாக 500 திருக்கோயில்களுக்கு ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்யப்படவுள்ளது.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு திராவிட மாடல் ஆட்சியின் முதல் 3 ஆண்டுகளில் ரூபாய் 4,157.70 கோடி மதிப்பீட்டில் சுமார் 18,708 துறை சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-2023 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் தற்போதுகூட நமது அமைச்சர் அவர்கள் சொன்னபட்ட 1,804க்கு மேற்பட்ட கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக இரண்டு ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யும் முன்னேற்பாட்டில் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு விமர்சனங்களுக்கிடையே தமிழ்நாட்டு கோயில்களுக்கான குடமுழுக்கு, திருத்தேர் பணிகள், கோயில் குளங்கள் பராமரித்தல், கோயில் நிலங்களை மீட்பது, திருக்கோயில்களில் திருமண மண்டபங்கள், நூலகங்கள், அன்னதானம் போன்ற இன்னும் பல்வேறு பணிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது முதல்வர் தளபதி அரசு. இந்துசமய அறநிலையத் துறையே தேவையில்லை என்று சொன்னவர்கள் இன்று வாயடைத்து நிற்கிறார்கள்.

### திருக்கோயில்களுக்கு அடிப்படை வசதிகள்!

அமைச்சர் அவர்கள் கிட்டதட்ட 600க்கு மேற்பட்ட கோயில்களில் ஆய்வு மேற்கொண்டு திருக்கோயில்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளிலிருந்து அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்திருக்கிறார்கள். திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் அவர்கள் மிகப் பொருத்தமாக இந்த துறையின் அமைச்சராக மரியாதைக்குரிய அண்ணன் சேகர்பாபு அவர்களை நியமித்து ஆன்மிக பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு உதவியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர் அவர்களை ஆன்மிக பெரியோர்களும், பொதுமக்களும் பாராட்டுகிறார்கள். எனவே, தமிழ்நாட்டு மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது கொடுத்து மகிழ்ந்திருக்கிறார்கள். இந்துசமய அறநிலையங்கள் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம், பக்கம் 114ல்para 40.5ல்தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் பழமை மாறாது புதுப்பிக்கும் திருப்பணிகளுக்கு சிறப்பு மானியம் அடிப்படையில் நெய்வேலி சட்டமன்ற தொகுதி, வெங்கடாம்பேட்டை வேணுகோபால் சுவாமி திருக்கோயில் ஊஞ்சல் மண்டபமும், திருத்தேரும் அமைத்துதரும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேல்காங்கயம் குப்பம் ஊராட்சியில் அங்காளபரமேஸ்வரி திருக்கோயிலுக்கும் இராஜகோபுரம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, வணிகவரி மற்றும் முத்திரைத்தாள் மானியக்கோரிக்கையில் தமிழ்நாடு அரசின் வருவாயில், இதுவரையில் 73 சதவிகிதம் வணிக வரியின் மூலமாகவும், 14 சதவிகிதம் பத்திரப்பதிவின் மூலமாகவும் பெறப்பட்டு வருகிறது. இவ்வகையில் இந்த இரண்டு துறைகளில் மட்டும் 87 சதவிகிதம் மொத்த அரசின் வருமானத்திற்கு காரணமாக இருந்து கொண்டிருக்கிறது. கழக அரசு பொறுப்பேற்ற போது வணிக வரியின் வருவாய் ரூ.85,867.86 கோடியாக இருந்தது. தற்போது 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.1,26,005.92 கோடியாக இருக்கிறது. எனவே, மூன்று ஆண்டுகளில் மொத்தம் 83,694 கோடி ரூபாய் கூடுதல் வரி வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியைவிட வணிகவரித் துறையின் இந்த வளர்ச்சிக்கு முதல்வரின் சிறப்பான அணுகுமுறையும், மற்றும்புதியதிட்டங்களும் தான் காரணம். முதல்வரின் முயற்சிகள் பாராட்டுக்குரியது. எனவே, IGST வரியின்மூலம் ஒன்றிய அரசு, தமிழக அரசிற்கு 1 ரூபாய்க்கு 26 பைசா மட்டுமே திருப்பி கொடுக்கிறது. வட மாநிலங்களான உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், பீகார், குஜராத் போன்ற மாநிலங்களுக்கு 40 சதவிகிதத்திலிருந்து சராசரியாக 50 சதவிகிதம்வரை திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு போன்ற உற்பத்தி துறையில் சிறந்த விளங்கும் மாநிலங்களில் இருந்து வெளிமாநிலங்களுக்கு விற்பனையாகக் கூடிய விற்பனை வரியான IGST வரி வருவாய், முழுவதுமாக மத்திய தொகுப்பிற்கு சென்று, பின்பு அவற்றில் ஒரு பகுதியாக மாநில அரசுக்கு வழங்கப்படுகிறது. இந்த IGST வரித்தொகையானது எந்த விகிதாச்சார அளவில் மாநில அரசுகளுக்கு பிரித்துக் கொடுக்கப்படுகின்றது என்று இன்னும் தெளிவான தரவுகள் இல்லை. ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு IGST வரித் தொகைகளை உரிய அளவில் உடனடியாக கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

வணிகர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்டுள்ள நமது முதலமைச்சர் அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற வணிகர்கள் சங்க மாநாட்டில் கலந்துகொண்டு வணிகர்களுக்கான குடும்ப நல நிதியை 1 இலட்சம் ரூபாயில் இருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தார்கள். கழக அரசு பதவியேற்றப்போது, வணிகர் நல வாரியத்தில் 47 ஆயிரத்து 299 உறுப்பினர்களே இருந்தார்கள். இப்போது தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 88 ஆயிரத்து 216 உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த 88,216 உறுப்பினர்கள் தமிழக அரசின்மூலம், வணிகர் நல வாரியத்தின்மூலம் பல்வேறு சலுகைகளைப் பெற்று பயனடைந்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு முறை சமாதானத் திட்டமாக கடந்த ஆண்டு வணிக வரித் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தின்மூலம் ஐம்பதாயிரத்திற்கும் குறைவாக நீண்ட நாள் வரியை பாக்கி வைத்திருந்த அனைத்து சிறுவணிகர்களும் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு அவருடைய வரிபாக்கிகள் அனைத்தையும் தள்ளுபடி செய்து வணிகர்களுடைய வாழ்வில் ஒளி ஏற்றி வைத்திருக்கிறது. இதன்மூலம் பயன்பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 1,15,805 பேர். இந்த 1,15,805 பேரும் முதல்வர் அவர்களுக்கு நன்றி கடன் பட்டிருக்கிறார்கள். எனவே, சமாதான திட்டத்தை மறு சமாதான திட்டமாகக்கூட ஆய்வு செய்யலாம் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதல்வருடைய அறிவுரைகளை, ஆலோசனைகளைப் பெற்று, அரசு அதிகாரிகள், வணிகர் நல வாரிய உறுப்பினர்கள், வணிகர் சங்கங்களின் கூட்டத்தை நடத்தி மீண்டுமொரு சமாதான திட்டத்தை கொண்டு வருவதற்கான ஆய்வுகளை செய்யலாம். நீண்ட கால நிலுவைத் தொகை வசூலிப்பதற்கும், வழக்குகள் முடிப்பதற்கும் உள்ள வாய்ப்புகள் குறித்து ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

### பத்திரப்பதிவுத் துறை!

பத்திரப்பதிவுத் துறையை பொறுத்தவரை போலி ஆவணங்கள் ரத்து செய்யும் அதிகாரத்தை பதிவுத் துறைக்கு அளிப்பதற்காக உரிய சட்ட திருத்த மசோதா இந்த மாமன்றத்தில் நாம் நிறைவேற்றினோம். குடியரசு தலைவர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு 16.8.2022 முதல் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.9.2022 அன்று இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இது தமிழக பத்திரப்பதிவுத் துறையின் வரலாற்றில் ஒரு மயில்கல் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அப்பாவி நில உரிமையாளர்களுக்கு பெரிய சொத்து



பாதுகாப்பை கொடுத்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இதன்மூலம் பயன்பெற்ற பயனாளிகளும், பொது மக்களும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றனர். பத்திரப்பதிவு துறையில் நான்கு வகையான பறிமாற்றங்களுக்கு stamp duty 7 சதவிகிதமும், பதிவுக் கட்டணம் 4 சதவிகிதமாகவும் இருந்தது. இன்றைக்கு கழக ஆட்சியில் 2 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையிலே மற்றொமொரு கோரிக்கை, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் rope car, மின் இழுவை இரயில், கல்லூரி, மன நல காப்பகம், பஞ்சாமிர்தம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருப்பதால் பணியாளர்கள் போதவில்லை. எனவே, கோயிலின் வருமானத்தில் 20 சதவிகிதம் செலவு செய்யலாம் என்பதை 30 சதவிகிதமாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னொன்று. நேற்றைக்கு சட்டசபையில் முதல்வர் அவர்கள் அறிவித்த 110 விதியின்கீழ் தேர்தலைப் பற்றி கவலைப்படாமல், அடுத்த தலைமுறையைப் பற்றி கவலைப்படுபவர்கள் நாங்கள் என்று முதல்வர் அறிவித்த, இன்னும் 18 மாதங்களில் 75,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட தமிழக முதல்வர் தலைமை வகிக்கும் தமிழ்நாடு கல்வியிலே no.1, மருத்துவத்திலே no.1, தொழில் துறையில் no.1, வேலைவாய்ப்பில் no.1, electronics ஏற்றுமதியில் no.1, தனி நபர் வருமானத்தில் no.1, இப்படி எல்லாத் துறைகளிலும் no.1 ஆக இருக்கிற, தமிழகத்திற்கு no.1 முதல்வராக இருக்கும் நீங்கள், வரும் காலத்தில் நாம் எதிர் நோக்க இருக்கிற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் இருநூற்றுக்கும் மேற்பட்ட இடங்களை வென்று, நமது. . .(மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையிலும் no.1 ஆக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நமது கூட்டணி வெற்றிபெறும் என்பதைத் தெரிவித்து. . .(மணியடிக்கப்பெற்றது)

நெய்வேலி தொகுதிக்கு தனியாக வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் தொடங்க வேண்டும்.

நெய்வேலி தொகுதிக்கு என்று தனியாக வட்டார வளர்ச்சி அலுவலகம்.

நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஊராட்சி காமாட்சி கேட்டையில் கெடிலம் ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும்.

என்.எல்.சி. நிறுவன விரிவாக்க பணிகளுக்கு வீடு மற்றும் தங்கள் வாழ்வாதாரமான விவசாய நிலங்களை வழங்கியவர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப நிரந்தர பணியும், உரிய இழப்பீடும் வழங்க வேண்டும். மேலும் R&R பாலிசியை முழுவதும் நடைமுறைப்படுத்தி உதவிட வேண்டும்.

என்.எல்.சி. நிறுவன விரிவாக்க பணிகளுக்கு வீடு மற்றும் தங்கள் வாழ்வாதாரமான விவசாய நிலங்களை வழங்கியவர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப நிரந்தர பணியும், உரிய இழப்பீடும் வழங்க வேண்டும். மேலும், R & R பாலிசியை முழுவதும் நடைமுறைப்படுத்தி உதவிட வேண்டும்.

என்.எல்.சி. நிறுவனத்தில் பணியின்போது இறந்தவர்கள் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் நிரந்தர பணி வழங்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி என்.எல்.சி. இந்தியா நிறுவனம் விரிவாக்க பணிகளுக்கு வீடு, நிலம் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு விட்டுமனை பட்டா வழங்குவதை விரைவுபடுத்த வேண்டும்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் உபயோகப்படுத்தாமல் உள்ள சுமார் 1,000 ஏக்கர் நிலத்தை SIDCO/SIPCOT மூலம் தொழிற்பேட்டை தொழில் வளாகம் அமைக்க வேண்டும்.

நெய்வேலி விமான நிலையம் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளையாட்டு மைதானம் (Mini Stadium) விரைந்து அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொகுதி முழுவதும் உள்ள ஆதி திராவிடர் வசிக்கும் காலனியில் இட நெருக்கடி உள்ளதால் வீடு இல்லாதவர்களுக்கு இலவச விட்டு மனை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்.எல்.சி. நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளர் பணி வழங்குவதில் கடலூர் மாவட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

தாயகம் திரும்பி யோருக்கு உதவிடும் வகையில் தொடங்கப்பட்ட ரெப்கோ வங்கி கிளை நெய்வேலி தாயகம் திரும்பியோர் குடியிருப்பு பகுதியில் துவங்க வேண்டும்.

வடக்குத்து ஊராட்சி, கீழ்வடக்குத்து ஆதி திராவிடர் காலனிக்கு மயானம் இல்லை, அவர்களுக்கு மயானத்திற்கு நிலம் ஒதுக்கி தர வேண்டும்.

இந்திரா நகர் பகுதியில் “உழவர் சந்தை” துவங்க வேண்டும்.

உங்கள் தொகுதி ஸ்டாலின் நிகழ்வில் முதல்வர் அறிவித்தபடி விருத்தாசலத்தை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

முந்திரி தொழிலாளர்களுக்கென்று தனி நல வாரியம் அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி திருவாமூர் to சோமாட்சி பாளையம் இணைப்பு பாலம் அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் உள்ள கட்டடமில்லா ஊராட்சி ஒன்றியம் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு புதிய வகுப்பறை கட்டடம் கட்ட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்.எல்.சி. இந்தியா நிறுவன சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரை கீழூர் சோழன் ஏரிக்கு திருப்பி விட்டு விவசாயிகளுக்கு உதவ வேண்டும்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள பண்ருட்டி பலாப்பழம் புகழ்பெற்ற ஒன்று பலாப்பழத்தை மதிப்புக்கூட்டி பலாப்பழ ஜூஸ் தயாரிக்க தொழிற்சாலையை இங்கே நிறுவ வேண்டும்.

பண்ருட்டி சுற்று வட்டாரங்களில் சுமார் 80,000 ஏக்கர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்பட்டு, ஆண்டொண்றுக்கு சுமார் 4 லட்சம் டன் விளைச்சல் கிடைக்கிறது. முந்திரி பழத்திலிருந்து பெனி (Fori) என்ற மதுவகை தயாரிக்க ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும்.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் பல்லாயிரம் ஏக்கர் பரப்பளவில் நிலக்கரி வெட்டி எடுத்துப் போக, மீதமுள்ள மண் குவியல்களில் வெட்டிவேர் பயிரிட்டு, நறுமண எண்ணெய் தயாரிக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி வேகாக்கொல்லை களப்பாயி ஈஸ்வரன் குடமுழுக்கு செய்ய வேண்டும். குளக்கரையில் படித்துறைகள் அமைத்து பக்தர்களுக்கு இளைப்பாறும் கூடம் கட்ட வேண்டும்.

நெய்வேலி தொகுதி மேல்காங்கேயன் குப்பம் அங்காளம்மன் கோவிலுக்கு ராஜகோபுரம் கட்டி தர வேண்டும் மற்றும் ஊரணி பொங்கல் கூடம் அமைத்து தர வேண்டும்.

அருள்மிகு ஆனந்தீஸ்வரர் திருக்கோயில்: பேர்பெரியான்குப்பம் பக்தர்கள் இளைப்பாறும் கூடம் தேவை ஸ்ரீ வேணு கோபால் திருக்கோயில்: வெங்கடாம் பேட்டை புதிய ஊஞ்சல் மண்டபம், புதிய திருத்தேர் அமைத்து கொடுக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி எலந்தம்பட்டு to கருக்கை சாலை கெடிலம் ஆற்றுக்கு மேம்பாலம் அமைத்து 8 கிலோமீட்டர் தார் சாலை அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி பலா விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் பலா மதிப்பு கூட்டுத் தொழிற்சாலை தொடங்க வேண்டும்.

என்.எஸ்.சி. இந்தியா நிறுவனத்திற்கு வீடு நிலம் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் வசிக்கும் மாற்றுக்குடியிருப்பு பகுதியில் அவர்கள் வாழ்வாதாரத்திற்கு உதவுகின்ற வகையில் சுயதொழில் தொடங்க சிறப்பு கவனம் செலுத்தி உதவ வேண்டும்.

வெள்ளவாரி ஓடையின் குறுக்கே காப்புக்காட்டில் தடுப்பணை கட்ட வேண்டும்.

நெய்வேலி தொகுதி, மாளிகாம்பட்டு அருகே கெடிலம் ஆற்றில் தண்ணீரை சேமிக்கும் விதமாக தடுப்பணை கட்ட வேண்டும்.

கீழ்மாம்பட்டு நாளோடையில், மழை நீரை தேக்க தடுப்பணை கட்ட வேண்டும்.

கீழ்மாம்பட்டு to கானாங்குப்பம் இணைப்பு சிறிய பாலம் பயன்படுத்த முடியாமல் பழுதடைந்து விட்டது, இதற்கு புதிய பாலம் அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, வடக்குத்து நகர் பகுதியில் அமைக்க உள்ள சிறகு பந்தாட்டம் மைதானம் விரைந்து அமைக்க வேண்டும்.

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் விதமாக மேல் காங்கேயன்குப்பம் காப்புக் காட்டில் ஒரு பெரிய ஏரியை அமைக்க வேண்டும்.

### விளைப்பொருட்களை பாதுகாக்க குளிர்சாதன வசதிகள்!

நெய்வேலி தொகுதியில் விளையக்கூடிய விளைப் பொருள்களான மா, பலா வாழை, மணிலா மற்றும் கம்பு, கொள்ளு, எள்ளு, கேழ்வரகு ஆகிய தானிய பயிர்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்ய அரசு உதவிடும் வகையில் பயிற்சியும் தொழில் தொடங்க உதவியும் செய்ய வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் விவசாய விளைப்பொருள்களை பாதுகாக்க அரசு குளிர்சாதன கிடங்குகளை அமைத்து தர வேண்டும்.

பெருமத்தூர், மாற்றுக்குடியிருப்பு பகுதிக்கு நெடுஞ்சாலையிலிருந்து நேரடி பாதை ஏற்படுத்தித் தர வேண்டும்.

வடக்குத்து புதிய வீராணத்திட்ட சுத்தகரிப்பு நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை 50 மீட்டர் அருகில் புளிச்சனேறிக்கு திருப்பி விட வேண்டும்.

அரசடி குப்பம் ஊராட்சி, சிறுதொண்டமாதேவியிலிருந்து பாவைக்குளம் செல்லும் சாலையை அகலப்படுத்தி செப்பனிட வேண்டும்.

வடக்குத்து ஊராட்சி 10,000 மேற்பட்டோர் வசிக்கும் நகர்ப்பகுதியில் அரசு ஆரம்ப பள்ளி துவங்க வேண்டும். மேலும், நூலகம் அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் விவசாய விளைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, அழகப்பசமுத்திரம் மாதா கோவில் பள்ளி பேர்பெரியான்குப்பம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய இரண்டு வேளையும் இருபுறமிருந்து அரசு டவுன் பஸ் இயங்க வேண்டும்.

இவ்வாறு சபா. இராஜேந்திரன் பேசினார்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு எண் 82க்குட்பட்ட கோட்டை மேடு வின்சென்ட் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கல்வி நிதி திட்டத்தின் கீழ் ரூ. 70.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 4 கூடுதல் வகுப்பறை கட்டடங்களை மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார் திறந்து வைத்தார். உடன் கல்விக் குழுத் தலைவர் திருமதி மாலதி நாகராஜ், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திருமதி வி.பி. முபசீரா, செயற்பொறியாளர் கருப்பசாமி, உதவி பொறியாளர் சதீஷ்குமார், பள்ளி தலைமை ஆசிரியர் தில்லை கோவிந்தன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# ஓசூரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் என அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர்கள் தே. மதியழகன்- ஓய்.பிரகாஷ் அறிக்கை

கிருஷ்ணகிரி,ஜூலை 1- கிருஷ்ணகிரி மாவட்டக் கழகச் செயலாளர்கள் தே. மதியழகன் எம்.எல்.ஏ.-ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





ஓசூர் பகுதியின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தற்போது கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி ஓசூர் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும் முன்னணி நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை அமைக்கவும், ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகளை விரிவு படுத்தவும்திட்டமிடப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனை கருத்தில் கொண்டு இந்த தொழில் முதலீட்டாளர்கள் உலக முதலீட்டாளர்களின் தேவையாகவும், அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அவருடைய அத்தியாவசிய தேவையான விமான நிலையம் அவர்களது நீண்ட நாள் கோரிக்கையை இதற்கு முன்பு இருந்த அரசுகள் செவிசாய்க்காமல் இருந்த நிலையில் தற்போது தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓசூர் பகுதியின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை தீட்டி 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்காண புதிய கட்டிடம் கட்டுமான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. அது மட்டுமல்லாமல் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் திராவிடம் மாடல் அரசு, தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் ஓசூர் பகுதி மக்களின் நீண்ட நாள் தேவையை கருத்தில் கொண்டு 2000 ஏக்கர் நிலப் பரப்பில் ஓசூரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் என்ற உன்னத திட்டத்தை அறிவித்துள்ளார் இந்த அறிவிப்பு ஓசூர் பகுதி மட்டுமல்லது கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. இந்த சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டதும் ஓசூர் பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் மேலும் வளர்ப்பதற்கு ஏதுவாக அமையும். அது மட்டுமல்லாமல் தொழில் நிறுவனங்களின் நேரம் விறையமாகாமல் அவர்களது சேவைகள் உடனடியாக செய்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். ஓசூர் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் தொழில் நிறுவனங்கள் மட்டுமல்லாது ஏற்றுமதி தரம் வாய்ந்த பல வண்ண ரோஜா மலர்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு உலக நாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. காய்கறிகள், பழங்கள் என வேளாண் உற்பத்தி பொருட்கள் பெருமளவுக்கு விளைவிக்கப்படுகிறது.கிரானைட் தொழிற்சாலைகள் மாம்பழக் கூழ் தொழிற்சாலைகளின் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் வெளிமாநிலங்களுக்கும், உலக நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கு இந்த விமான நிலையம் பெருமளவில் உதவியாக இருக்கும். மேலும் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரை உலக அரங்கில் அடையாளம் காட்டி, அங்கீகாரம் வழங்கி சர்வதேச விமான நிலையத்தை சட்டமன்றத்தில் அறிவித்த கழக தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழக மக்களின் பாதுகாவலர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களது தலைமையிலான ஆட்சின் மேலும் ஒருமைல்கல்.

கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் என்றென்றைக்கும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உற்ற துணையாக இருப்பார்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி கொள்கிறோம்.

இவ்வாறு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் ஓசூர் சட்டமன்ற உறுப்பினருமான ஓய்.பிரகாஷ் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.